**2020ஆம் வருடம்  டிசம்பர் மாதம் 31.12.2020ம் நாள் வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**முன்னிலை : திரு.Y. சுரேந்திரன், பி.இ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)**

**பொருள் எண்: 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு குத்தகை இனங்கள் ஆண்டு குத்தகை இனங்கள் 2018–2019 முதல் 2020–2021–ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் விடப்பட்டுள்ளது. தற்போது குத்தகை காலம் 31.03.2021–ஆம் தேதியுடன் முடிவடைவதால் 2021–2022–ஆம் ஆண்டு முதல் 2023–2024–ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுகளுக்கு கீழ்காணும் குத்தகை இனங்களை பொது ஏலம், ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும்  மற்றும் ஏலத்திற்கான ஏலநிபந்தனைகள் மற்றும் துணை விதிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. வாரச்சந்தை
2. தினசரி காய்கறி மார்கெட்
3. நகர பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம்  (தென் கிழக்கு)
4. ஆடு அடிக்கும் தொட்டி சுங்க வசூல்
5. மீன் மார்கெட் சுங்க வசூல்
6. நகர பேருந்து நிலைய மிதிவண்டி நிலையம்
7. வர்த்தக தொலைக்காட்சி விளம்பரம்
8. வர்த்தக ஒலிபெருக்கி விளம்பரம்
9. பொருள் பாதுகாப்பு அறை உரிமம்
10. புறநகர் பேருந்து நிலையம் எடை பார்க்கும் இயந்திரம் (வடபுறம்)
11. புறநகர் பேருந்து நிலையம் எடைபார்க்கும் இயந்திரம் (தென்புறம்)
12. இராஜகோபால் பூங்கா.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 2**

தருமபுரி நகராட்சியில் ஆணையாளர் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN29AM 7747 இவ்வாகனம் சுமார் 2,76,096கிலோமீட்டர் வரை பயன்படுத்தப்பட்டுள்ளதால் இவ் வாகனத்தில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பராமரிக்க செலவினம் அதிகமாக ஏற்படுவதால் மேற்கண்ட ஈப்பு வாகனத்தினை கழிவு செய்ய பொறியாளர் அரசு தானியங்கி பணிமனை தருமபுரி அவர்களிடம் கோரியதின் பெயரில், பொறியாளர் அரசு தானியங்கி பணிமனை தருமபுரி அவர்களின் கடித ந.க.எண். A3/756/2020 DATE 27.11.2020 கடிதத்தில் மேற்கட்ண்ட ஈப்பு வாகனத்தினை கழிவு செய்ய The Director T.N.M.V.M.D Velacherry Checkpost Chennai அவர்களுக்கு பரிந்துறை செய்யப்பட்டதினை தொடர்ந்து, இயக்குநர் மோட்டார் வாகனப் பராமரிப்பு துறை வேளச்சேரி சென்னை அவர்களின் கடித.செ.மூ.மூ.எண்.எச்1/14266/2020 நாள் 15.12.2020மூலம் மேற்கண்ட ஈப்பு வாகனத்தினை முதிரா நிலையில் கழிவு செய்ய பரிந்துறை செய்தும், முதிரா நிலையில் கழிவு செய்யப்பட்டதற்கு அரசிடம் உரிய அனுமதி பெற்றிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாகனம் தமிழக அரசு சார்பு நிறுவனத்திற்கு சொந்தமானதால் மேற்படி வாகனம்/ வாகனங்கள் அரசுப் பயன்பாட்டிற்கு உகந்தவை அல்ல என கழிவு செய்யப்பட்டதால் இவ்வாகத்திற்கு/ வாகனங்களுக்கு வழங்கப்பட்ட பதிவெண்கள் நிறுத்தப்பட்டள்ளவையாக (Ceased to exist) அறிவிக்கப்பட்டடுள்ளதால் இவ்வாகனங்களுக்குரிய பதிவுப் புத்தகத்தினை இவ்வலுவலகத்தின் ஊர்தி அலுவலர் அதற்கான வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒப்புவிப்பு (Surrender) செய்து தாங்களே தொழில்நுட்ப வல்லுநர் ஆய்வறிக்கையில் குறிப்பிட்ட தொகைக்கு குறையாமல் இவ்வூர்தியை/இவ்வூர்திகளை விற்பனை செய்து கொள்ளலாம் என மேற்கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேலும் மேற்கண்ட ஈப்பு வாகனமானது நகராட்சி ஆணையர் அவர்களின் உபயோகத்திற்கு பயன்படுத்திய வாகனம் ஆகும். நகரில் குடிநீர் பணிகள்,திடகழிவு பணிகள், வரிவசூல் பணிகள், நகரமைப்பு பணிகள் மற்றும் இதராபணிகள் மேற்கொள்ளவும் நகராட்சி ஆணையருக்கு வாகனம் தேவைப்படுவதால், புதியதகாக ஒரு ஈப்பு வாகனம் வாங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1).மன்றம் அனுமதிக்கலாம்

2).அரசுக்கு முதிரா நிலையில் கழிவு செய்திட உரிய அனுமதி பெற பிரரோணை அனுப்பலாம்

3). இயக்குநர் மோட்டார் வாகனப் பராமரிப்பு துறை வேளச்சேரி சென்னை அவர்களின் கடித செ.மூ.மூ.எண்.எச்1/14266/2020 நாள் 15.12.2020 கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

4)மேற்கண்ட கடிதத்தில் வாகனம் விற்பனை செய்யப்பட்டால் எதிர்பார்க்கப்படும் தொகை ரூ1,40,000/— என தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

5) மேற்படி கழிவு செய்யப்பட்ட வாகனத்திற்கு மாற்றாக புதிய ஈப்பு வாகனம் வாங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்:3**

தருமபுரி நகராட்சி வார்டு எண் **10** அஞ்சலி நகரில் குடிநீர் குழாய்கள்அமைக்கும் பணிக்கு **19.11.2020** அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் |
|---|---|---|
| 1 | திரு.ஜ.பயாஸ் | 0.22% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.டி.எஸ்.ஜப்பார் | **0.25**% மதிப்பீட்டைவிடஅதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட வரிசை பண் **1**ல் கண்ட திரு.ஜ.பயாஸ் அவர்கள் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்:4**

தருமபுரி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணி மேற்கொள்ள அரசாணை **(**எம்.எஸ்)எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் **(**எம்.இ.**3)** துறை நாள் 30.04.1997ன் அளவு கோலின் படி இந்நகரரட்சிக்கு 241 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிய வேண்டும். ஆனால் தற்போது இந்நகராட்சியில் 151 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிகிறார்கள். மீதமுள்ள 90 பணியாளர்களை தனியார் ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing from Private Service) பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம் எஸ்.28609/ஜே3/2018 நாள் 25.03.2019ல் அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி அனுமதியை தொடர்ந்து தருமபுரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2018-2019ம் ஆண்டு தினக்கூலியாக ரூ.248/- மற்றும் ESI, EPF, LIC மற்றும் சேவை கட்டணம் சேர்த்து ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.D.S.ஜப்பார், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 01.08.2019 முதல் 90 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி செய்ய இந்நகராட்சி நகர் மன்ற தீர்மான எண் 119 நாள் 30.07.2019ன் படி அனுமதிக்கப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டு ஒரு வருடம் சிறப்பாக பணி செய்து முடிக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் அவர்களின் வருடாந்திர தினக்கூலி அவ்வப்போது உயர்த்தி வழங்கும் பட்சத்தில் ஒப்பந்ததாரருக்கு தினக்கூலியை உயர்த்தி வழங்கலாம என உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிடம் தெளிவுரை 21.10.2019 அன்று கோரியதில் 25.10.2019 ம் தேதிய உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை அவர்கள் கடிதத்தில் உயர்த்தி வழங்கலாம் என தெளிவுரை வழங்கியதை தொடர்ந்து இந்நகர் மன்ற தீர்மான எண் 184 நாள் 31.10.2019ல் கூடுதல் செலவினத்திற்கு அனுமதி பெறப்பட்டு 01.09.2019 முதல் தினக்கூலியை உயர்த்தி வழங்கப்பட்டது. ஏற்கனவே உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை தருமபுரி அவர்களின் தெளிவுரையின் படியே தற்பொழுதும் மாவட்ட ஆட்சியர், தருமபுரி அவர்களின் வருடாந்திர தினக்கூலியினை உ யர்த்தி வழங்கலாம்.

மேற்கொண்டு தொடர்ந்து இரண்டாம் ஆண்டு பணி மேற்கொள்ள இந்நகராட்சி நகர் மன்ற தீர்மான எண் 176 நாள் 15.07.2020ல் அனுமதிக்கப்பட்டு 16.07.2020 ல் பணி உத்தரவு வழங்கப்பட்து.

மேற்கண்ட தீர்மான எண் 176 நாள் 15.07.2020ல் மாவட்ட ஆட்சியர் தருமபுரி அவர்களின் 2020-2021ம் ஆண்டு தினக்கூலி மாற்றி அமைக்கும் பட்சத்தில் தினக்கூலி மாற்றி ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்ற அனுமதி பெறப்பபட்டுள்ளது.

எனவே, மேற்படி தனியார் ஒப்பந்த பணியாளர்கள் 90 நபர்களுக்கு தினக்கூலி தொகை ரூ.320/-லிருந்து ரூ.339/-ஆக 01.10.2020 முதல் உயர்த்தி வழங்கவும் அதற்காகும் ஒரு வருட உத்தேச வித்தியாச கூடுதல் செலவுத் தொகை ரூ.7.00 லட்சத்தை அனுமதிக்க மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.8916/2020/E1 நாள் 30.09.2020படி 01.10.2020 முதல் தினக்கூலி ரூ.320/-லிருந்து ரூ.339/-ஆக உயர்த்தி வழங்கலாம்.
3. ஒரு வருடத்திற்கு ஒப்பந்தபுள்ளில் தெரிவித்துள்ள தொகையை விட கூடுதல் செலவினம் ரூ.7.00 லட்சத்திற் கு மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 5

கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகளவில் கொள்ளை நோயாக உருவெடுத்துள்ள நிலையில், **144** தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் தீவிரமாக தொற்று நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு டெங்கு தடுப்பு பணிகள் மற்றும் கொரோனா நோய் தொற்று பாதித்த பகுதிகளில் தினசரி காய்ச்சல் சர்வே எடுத்துல் களப்பணியாளர்கள் **56** பணியாளர்கள் தற்காலிகமாக **01.12.2020** முதல் **31.01.2021** வரை **56** நாட்களுக்கு மாவட்ட ஆட்சியர், தருமபுரி அவர்களால் அங்கீகரிக்கப்பபட்ட தினக்கூலி ரூ.**264/–** உடன் EPF 13%, ESI 3.25 & Administrative Charges 3% வழங்கி **56** நபர்களை தனியார் மூலம் பணியாளர்களை ஈடுபடுத்தி கொள்ள அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு. D.S. ஜப்பார், நகராட்சி ஒப்பந்ததாரர். | Rs.297/- |
| 2. | திரு. J. பயாஸ், நகராட்சி ஒப்பந்ததாரர். | Rs.302/- |

| | | |
|---|---|---|
| **1.** | மாவட்ட ஆட்சியர், தருமபுரி அவர்களின் **2020–2021**ம் ஆண்டு தினக்கூலி பட்டியல் படி | Rs.264.00 |
| **2.** | ஒரு டெங்கு, கொரோனா களப்பணியாளர்களுக்கு நுஎகு – **13**ரூ | Rs.34.32 |
| **3.** | ஒரு டெங்கு, கொரோனா களப்பணியாளர்களுக்கு நுளுஐ – **3.25**ரூ | Rs.8.58 |
| **4.** | ஒரு டெங்கு, கொரோனா களப்பணியாளரின் கூலியில் ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு – **3**ரூ | Rs.7.92 |
| | **மொத்தம்** | **Rs.314.82 (or) Rs.315.00** |
| | 56 டெங்கு. கொரோனா களப்பணியாளர்களுக்கு 56 நாட்களுக்குரிய செலவினம் | **Rs.9,87,840.00** |

**56** டெங்கு, கொரோனா களப்பணியாளர்களுக்கு **56** நாட்களுக்கு பணி மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**9.95** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் திரு. D.S.ஜப்பார், நகராட்சி ஒப்பந்ததாரர் தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்படி செலவினத்தினை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பயன்பாட்டு கட்டணம் மற்றும் பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

## பொருள் : 6

தருமபுரி நகராட்சியில் தமிழக அரசு காட்டும் வழிகாட்டுதலின் படியும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள், கொரோனா வைரஸ் நோயின் அறிகுறிகள், சிகிச்சைகள், கொரோனா வைரஸ் நோய் பரவும் விதம் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பொது மக்கள் அறியும் வகையில் தினமணி, தினத்தந்தி மாலை தமிழகம் நாளிதல்கள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யபட்டதற்கு உண்டான தொகை ரூ.42,891/-ஐ நாளிதலுக்கு வழங்க நகர் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **நாளிதழ் பெயர்** | **வெளியான நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1. | தினமணி நாளிதழ் | 20.05.2020 | 9,900 |
| 2. | தினத்தந்தி நாளிதழ் | 22.05.2020 | 18,291 |
| 3. | மாலை தமிழகம் நாளிதழ் | 22.05.2020 | 14,700 |
| | **மொத்தம்** | | **42,891** |

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் :7

இந்நகராட்சிக்கு சொந்தமான நகரபேருந்து நிலையம் பொருள்பாதுகாப்பு அறை மற்றும் வர்த்தக ஒலிபெருக்கி விளம்பரம் உரிமம் சுங்க வசூல் இனத்திற்கு 04.11.2020, 19.11.2020, 07.12.2020 ஆகிய மூன்று தேதிகளில் 2020–2021 முதல் 2022–2023 வரை மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. மூன்றாவதாக 07.12.2020 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது. திரு.என்.சரவணன் என்பவர் ரூ.92,000/–க்கும் திரு.மு.ராஜ்குமார் என்பவர் ரூ.91,000/–க்கும் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.என்.சரவணன் என்பவர் வழங்கியுள்ள உயர்ந்தப்பட்ச ஒப்பந்நப்புள்ளியை அனுமதிக்கலாம்.
2. 2020–2021 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து, 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகை செலுத்தவும், 2021–2022 ஆம் ஆண்டு குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து 2022–2023 ஆம் ஆண்டு குத்தகைக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரப்பெற்ற ஒப்புந்த புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண்: 8

தருமபுரி நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகள், பிரிண்டர்கள்,ஸ்கேனர்கள், ஜெராக்ஸ் இயந்திரத்தினை ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 27.11.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | SR SYSTEM SALEM | 0.21% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | GOLDEN EYE SALEM | 2.94% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரிசை எண் 1ல் கண்ட **SR SYSTEM SALEM** நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்: 9**

தருமபுரி நகராட்சி நகர பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில், முகமது அலி கிளப் ரோடு (வளாக எண் 1 வார்டு சி T.S.No.5, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41 மற்றும் 42)ல் ரூ.500.00 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக வணிக வளாகம் அமைக்க Under Design Build Finance Operate and Transfer (DBFOT) Basis மற்றும் Public Private Partnership (PPP Mode) தனியார் பங்களிப்புடன் அமைத்து 17 வருடங்களுக்கு (கட்டுமான பணி காலம் இரண்டு வருடங்கள்) பராமரித்து நகராட்சியிடம் ஒப்படைக்கும் முறையில் பணி மேற்கொள்ள நகர மன்றம் தனது தீர்மான எண் 466 நாள் 11.07.2018ல் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் தனது கடித எண் Roc.No.25708-B/P4 நாள் 26.12.2018படி முதன்மை ஒப்புதல் (Principal approval) வழங்கியதை தொடர்ந்து மேற்கண்ட திட்டப்பணிக்கான ஒப்பந்தபுள்ளிகள் 04.04.20219ல் பெறப்பட்டு நாடாளுமன்ற தேர்தல் விதிகள் அமுலில் இருந்ததால் 30.05.2019ல் பரிசீலிக்கப்பட்டது. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட Financial BIDல் (1). KCEE Properties Pvt Ltd Chennai அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு (Annual Premium) ரூ.27.50லட்சம் ஆண்டு ஒன்றுக்கு தொகையாக செலுத்தவும் மற்றும் (2) திரு.பெ. அண்ணாதுரை தருமபுரி அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு (Annual Premium) ரூ.72.00 லட்சம் ஆண்டு ஒன்றுக்கு தொகை செலுத்துவதாகவும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்தபுள்ளியின் பரிசீலனைக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு நகர மன்றம் தனது தீர்மான எண் 86 நாள் 12.06.2019ல் உயர்த்தபட்ச Annual Premium கொடுத்ததுள்ள திரு. பெ.அண்ணாதுரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி Annual Premium ரூ.72.00 இட்சம் கோரப்பட்டதினை ஏற்றுக்கொள்ளப்பட்டு L.O.A. வழங்கப்பட்டது.

இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 116 நாள்29.05.2020ன் படிதொடர்புடைய மன்ற கூட்ட பொருளில் தெரிவிக்கப்பட்ட காரணங்களினால் திரு பெ.அண்ணாதுரை ஒப்பந்ததருக்கு அளிக்கப்பட்ட L.O.A. திரும்ப பெறப்பட்டு இரண்டாவது உயர்ந்த தொகை (Second Highest Bid) கொடுத்துள்ள KCEE நிறுவனத்திற்கு மேற்படி பணிக்கான L.O.A. வழங்க அனுமதிக்கப்ப;டடு தற்போது புதிய வணிக வாளகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது.மேலும் மேற்கண்ட

“KCEE Properties Pvt Ltd Chennai For the above said project RFP Document Special Purpose Vehicle(SPV) as per Clause 2.1.3 of RFP” ன் படி KCEE Properties Pvt Ltd Chennai நிறுவனத்தின் பெயரிலிருந்து ATHIYAMAN INFRA PRIVATE LIMTED என்ற பெயருக்கு மாற்றி தருமாறு 23.11.2020 அன்றைய கடிதத்தில் கோரியுள்ளார். மேற்கண்ட Request for Qualification Clause 2.1.3 Page No.29ல் புதியதாக அமைக்கும் வணிக வளாகத்திற்கு of Special Purpose Vehicle (SPV) மூலம் புதியதாக ஒரு நிறுவனம் அமைக்க அனுமதிககலாம் என தெரிவித்துள்ளது. இந்த Special Purpose Vehicle(SPV) as per Clause 2.1.3 of RFQ” ன் படி ATHIYAMAN INFRA PRIVATE LIMTED லிருந்து இனி வரும் காலங்களில் மேற்கண்ட வணிகவளாகம் பணி தொடர்பான கடிதங்கள் மற்றும் இதர பணிகள் மற்றும் நடைமுறைகள் அனைத்தும் ATHIYAMAN INFRA PRIVATE LIMTED என்ற பெயரில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1).மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்: 10**

தருமபுரி நகராட்சி இராமலிங்கசெட்டி தெருவில் மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் உள்ள நகராட்சி பொறியாளர் குடியிருப்பில் போதிய கழிவறைகள் வசதிகள் மற்றும் இதர வசதிகள் இல்லாததால் புதியதாக கழிவறை மற்றும் இதர வசதிகள் செய்ய வேண்டியிருப்பதால் மேற்கண்ட இடத்தில் புதிய கழிவறை மற்றும் இதர வசதிகள் அமைக்கும் பணிக்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ3.00லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்:11**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 23 அஹமத்கான் குறுக்கு தெருவில் உள்ள சாலை மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகள் இவ்வழியாக செல்ல மிகவும் சிறமமாக உள்ளதால் மேற்கண்ட சாலையினை பொது மக்களின் நலன் கருதி சரி செய்ய வேண்டியிருப்பதால் இப்பணிக்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ1.25லட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**பொருள் எண்:12**

தருமபுரி நகராட்சி வார்டு எண் 30 சேலம் மெயின்ரோட்டில் எஸ்.எஸ்.கே.மருத்துவமனை அருகில் கல்வெர்ட் அமைக்கும் பணிக்கு 01.12.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை கீழ் கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் ஒப்புநோக்கு விவரம் |
|---|---|---|
| 1 | திரு.ஜ.பயாஸ் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.டி.எஸ்.ஜப்பார் | 0.16% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட வரிசை எண் 1ல் கண்ட திரு.ஜ.பயாஸ்அவர்களின் மதிப்பீட்டினைவிட குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் : 13**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பை விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள், மழை மற்றும் குளிர் காலங்களில் கவனிக்க வேண்டியவை குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள், கொரோனா பற்றிய சமூக இடைவெளி அவசியம் குறித்த ஸ்டிக்கர்கள், டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் வாங்கி வழங்குவதற்கு விலைப்புள்ளி கோரியதில் 24.12.2020ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விவரம் | அளவு | SSI INDCO SERVE | Tirunelveli District Multi Purpose Service Industrial Co-operative Society Ltd., Ind. No.TNY-2. | Arumbakkam Stationeries & Printing Service Industrial Co-operative Society Ltd., |
|---|---|---|---|---|---|
| 1. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பை விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள், | 10000 | 150000 | 160000 | 155000 |
| 2 | மழை மற்றும் குளிர் காலங்களில் கவனிக்க வேண்டியவை குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள், | 10000 | 150000 | 160000 | 155000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | கொரோனா பற்றிய சமூக இடைவெளி அவசியம் குறித்த ஸ்டிக்கர்கள் | 10000 | 150000 | 160000 | 155000 |
| 4 | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் | 10000 | 150000 | 160000 | 155000 |
| | | | 600000 | 640000 | 620000 |
| | CGST 9% | | 54000 | 57600 | 55800 |
| | SGST 9% | | 54000 | 57600 | 55800 |
| | **Total Amount** | | **708000** | **755200** | **731600** |

**அலுவலக குறிப்பு :**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் SSI INDCO SERVE, Kovilpatti நிறுவனத்தார் குறைவாக கொடுத்துள்ள தொகை ரூ.7,08,000/- விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுககதார நலன்களை கருத்தில் கொண்டும், தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது நிதியில் மேற்கண்ட செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் :14**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு அவசர அவசிய தேவையான முழு உடல் உறை 300 எண்ணிக்கை, முக உறை 25000 எண்ணிக்கை, கையுறை 3000 எண்ணிக்கை வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.8.10 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்:15**

தருமபுரி நகராட்சிக்குட்பட் வார்டு எண் 30 சேலம் மெயின் ரோட்டில் எஸ்.எஸ்.கே. மருத்துவமனை அருகில் உள்ள கல்வெர்ட் தாழ்வாக உள்ளது, இதனால் மழைக்காலங்களில் மண் அடைப்புகள் ஏற்பட்டு மழை நீர் வெளியேராமல் சாலைகளில் மழை நீர் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுகின்றது. எனவே தற்போது மழை காலம் என்பதால் மழை நீர் செல்ல ஏதுவாக புதியதாக கல்வெர்ட்டு அமைக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட பணியினை ரூ1.20லட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம்அனுமதிக்கலாம்

**பொருள்:16**

ஒப்பந்ததாரர் திரு.கே.இராமன் அவர்கள் 2012–2013 மற்றும் 2011–2012, 2013–2014, 2014–2015 அகிய ஆண்டுகளில் ஒப்பந்த பணிகளுக்கு இறுதி தொகை வழங்கும் போது பிடித்தம் செய்யப்பட்ட தொகை மற்றும் முன்வைப்பு தொகையினை திருப்பி வழங்க கோரியுள்ளார். ஒப்பந்ததாரர் கோரிய முன்வைப்புதொகை காலங்கடந்த முன்வைப்பு தொகையாக உள்ளதால் கீழ்கண்ட தொகையினை வாங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

குடிநீர் நிதி ரூ.408942/–

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தனி அலுவலர்**
**மற்றும் ஆணையாளர்(பொ)**
**தருமபுரி நகராட்சி**

**2020ஆம் வருடம் டிசம்பர் மாதம் 31.12.2020ம் நாள் வியாழக் கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 முதல் 16 வரை | 284 முதல் 299 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.